
திகில் நகரம் டோக்கியோ!
லயன் காமிக்ஸ்
ரூ.6/-


மாடஸ்டி & கார்வின் தோன்றும்
திகில் நகரம் டோக்யோ!
ஜப்பான் நாட்டின் வடக்குத் தீவான ஹொக்கைடோவின் தலைநகர் ஸாப்போரோவை பனிப் போர்வை போர்த்திருந்தது.
புடோக்வையில் -
ஹை!
ஜூடோ, ஐகிடோ, கராத்தே போன்ற கலைகளில் தலைசிறந்த மாஸ்டர் என்று கருதப்பட்ட கஸூமியின் பயிற்சித்தளம் அது.
பிரமாதம்!


கிண்டலாக சிரிக்கிறார் பாருங்கள்.. மாஸ்டர் கஸுமி.. இவரைக் கொஞ்சம் 'பிடித்து' விடுங்கள்!
இரண்டு மணி நேரம் தொடர்ந்து பயிற்சி அளித்ததில் என் எழுபது வயது முதுமையை உணருகிறேன்.. மேடம் மாடஸ்டி!
இந்த அகால இரவுப் பொழுதில் கொடுத்த பயிற்சிக்கு நன்றி மாஸ்டர் கஸுமி... என்றைக்கும் போல் தெம்புடன்தான் நீங்கள் இருக்கிறீர்கள்.
அறுபதில் இருந்த மாதிரி நான் இன்றைக்கு இல்லை. பயிற்சிதான் என்பதால் இந்த அளவுக்கு தாக்குப் பிடித்து விட்டேன்... ஆனால் நிஜமான மோதல் என்றால் நிலைமை வேறாகிவிடும்.
..அப்படியொரு நிலைமையை நான் பொதுவாக அங்கீகரிப்பதில்லை - உங்களுக்கும் இது தெரியுமே!
நாங்களும் அங்கீகரிப்ப தில்லை... இல்லையா இளவரசி! அதனாலேயே நாங்கள் சில வேளைகளில் நெருக்கடியில் சிக்கித் தவிப்பதுண்டு!


என் பேத்தி கிமி தன் வருங்கால கணவனான அஸாடாவுடன் டோக்கியாவிலிருந்து இன்னும் ஒரு மணி நேரத்தில் வந்து சேர இருக்கிறாள்...
நாங்களும் வருகிறோம்!
ஓடோரி பார்க் வழியாக போவோம்... பனித் திருவிழாவினை யொட்டி உருவாக்கப்பட்டுள்ள அற்புத சிலைகளை கண்டு ரசிக்கலாம்.. ஏகாந்தமாக இருக்கும் இப்போது!
உறை பனியினால் வடிவமைக்கப் பட்டிருந்த புராண கால தேவதைகள், சைத்தான்கள் போன்ற சிலைகள் நிலவொளியில் விநோதமாக தோற்றமளித்துக் - கொண்டிருந்தன..
அந்த வித்தியாசமான சூழலில் ஓர் இளம் பெண் மரண பீதியில் மூச்சிரைக்க ஓடிக் கொண்டிருந்தாள்.
அஸாடா வேண்டாம்.. விட்டு விடு என்னை


விரட்டி வந்த கரிய உருவத்தின் கையிலிருந்த பிச்சுவா நிலவொளியில் மின்னியது..
உனக்கென்ன வெறி பிடித்து விட்டாதா.. அஸாடா?
இல்லை..! எனக்கு புத்தி எல்லோரையும் போல் தெளிவாகத் தான் இருக்கிறது கிமி...!
உன்னைக் கொல்ல வேண்டிய நெருக்கடி உருவானதற்காக நான் எவ்வளவு விசனப் படுகிறேன்... தெரியுமா?
மாட்டிக் கொண்டு விட்ட அந்த இளம் பெண் தற்காத்துக் கொள்ள அங்கிருந்த பனிச்சிலை ஒன்றினை பற்றி ஏறத் தொடங்கினாள்
ப்ளீஸ்.. சொன்னால் கேள்!
கல்லெறியும் தொலைவில் -
இதுதான் காதல் தெய்வம்.. ஐஸென் மயோ - ஓ! ஆறு கரங்களில் இரண்டில் பற்றியிருக்கும் வஜ்ராயுதத்தின் ஆற்றல் இடி - மின்னலையும் மிஞ்சியது!
ஐய... காதல் தெய்வத்தைப் பற்றிய என் கற்பனையே வேறு!


வஜ்ராயுதம், யாவாரா கழி, காங்கோ - எல்லாமே ஏறத்தாழ ஒன்றுதான்.
பழங்கால புத்த குருமார்கள் உருவாக்கிய ஆயுதம்தான் இன்று நீ லாவகமாக கையாளும் காங்கோ...
வேண்டாம்.. விட்டு விடு என்னை
அலறுவது.. யார்?
அந்த திசையில் -
தவிர்ததுக் கொள்ள முடியாத நிர்ப்பந்தம்.. கிமி
ஆஆ..
சதக்!
கொலை! அந்தப் பெண் மீது கத்தியை வீசிவிட்டான்..


அவனை பிடிக்க முயற்சியுங்கள் வில்லி.. நான் இவளை கவனிக்கிறேன்!
இசகு பிசகாக ஏதேனும் ஆகிவிட்டதா... மாடஸ்டி?
படு மோசமாக காயமடைந் திருக்கிறாள்.. ஒத்தாசைக்கு வாருங்கள் கஸுமி
கத்தியை தொடாமல்.. பிடித்து இறக்குங்கள் - இவளை
யாரோ அலறுவது கேட்டதே... இங்கே!
போய் ஆம்புலன் ஸுக்கும் அப்படியே போலீஸுக்கும் தகவல் கொடுங்கள்.. சீக்கிரம்!
உயிர் இருக்கிறது.. ஆனால் இதயம் பலவீனமாக துடிக்கிறது.
ஐயோ... இவன் என் பேத்தி கிமி அல்லவா!



உங்கள் பேத்தியா..? இவளுக்கு இந்தக் கொடுமையை.. யார்..
கிமி.. ஓ.. என் அன்புச் செல்வமே.. கிமி
ஆம்புலன்ஸ் வரும் வரை இவளோடு இருங்கள்.. நான் வில்லிக்கு உதவிட செல்கிறேன்.
இரண்டு நிமிடங்களுக்குப் பின் -
தப்பி விட்டானா?
ஆமாம்.. ஆனால் இங்கேதான் எங்காவது பதுங்கிக் கிடக்கிறான்.. பனியில் ஓடும் காலடி ஓசை சட்டென்று ஓய்ந்து போனது.
அவன் கொல்ல முயன்றது - கஸுமியின் பேத்தி கிமியை!
அடக் கடவுளே..!
கடைசியாக காலடியோசை எங்கே கேட்டது?
டிஞ்ஞேஸரின் பின்னால்!
நீ இந்தப் பக்கமாக சுற்றி வா.. நான் அந்தப் பக்கமாக வருகிறேன்.. பயல் மாட்டிக் கொள்வான்!


நெருக்கடியை உணர்ந்த குற்றவாளி வெளியேறி ஓடித் தப்ப முயன்றான்.
- அதோ ஓடுகிறான்.. இளவரசி!
வந்த வழியே ஓடுகிறான்.. கார் எதுவும் காத்துக் கொண்டிருக் குமோ?
திடீரென்று அவன் சறுக்கிட -
அஸாடா.. நீயா?
நீயா கிமிக்கு இந்தக் கொடுமையை செய்தாய்?
ஏய் கிழவா.. விலகிப் போ -அப்பால்!


அந்த பல்கலை வல்லுநரிடம் அவனுடைய கைவரிசை செல்லுபடியாகவில்லை!
அஹ்..!
பட்
ஹைற..!
மரண அடி.. பயல் ஒழிந்தான் -இத்தோடு!
மடேர்!
மென்னியை முறித்து விட்டீர்களே... மாஸ்டர்!
என் வல்லமையை இப்படி நான் ஆங்காரமாக பயன் படுத்தியது என் வாழ் நாளில் இதுதான் முதல் தடவை!
கிமியை மணம செய்து கொள்வதாக இருந்தவன் இந்த அஸாடா.. ஆனால் அவன் கதை முடிந்துவிட்டது - வேறுவிதமாக


காரணம் எனக்கு தெரிந்தாக வேண்டும்!
அது பற்றி பின்னர் ஆராய்வோம்.. இன்னமும் விபரீதமாக எதுவும் நடந்து விடவில்லை. உயிர் இருக்கிறது இவளுக்கு.
அதோ.. ஆம்புலன்ஸ் வந்து விட்டது!
மருத்துவ மனையில் - இரண்டு மணி நேரம் கழித்து
சுருக்கமாக பேசிவிட்டு வந்து விடுங்கள்
கிமி..! அஸாடா ஏன் கொலை வெறியனானான்?
கா..காரில்.. ஒரு சிறு 'பாட்ஜ்' இருந்ததை கண்டேன்.. பினிக்ஸ்.. அவன் அதில் உறுப்பினர் போலும்.. இரகசியம் எனக்கு தெரிந்து விட்டதால் நான் உயிர் வாழ முடியாது என்றான்
பினிக்ஸ்..? என்ன அது.. கிமி?
தெரியாது எனக்கு! இருந்தும் அவன் என்னை கொன்றுவிட முயன்றான்!


அந்தப் பயலைக் கொன்றதால் மாஸ்டருக்கு ஏதும் பிரச்சனை வருமென்று நினைக்கிறாயா மாடஸ்டி?
தற்காப்புக்காக... என்று போலீஸ் தீர்மானித்து விட்டது!
உண்மை அதுவல்ல... கஸூமி ஒரு ஜீடோகா.. யாரையும் எளிதில் மடக்கி விடும் ஆற்றலுடையவர்.. ஆனால் தன் அருமை பேத்தி கத்தியினால் குத்தப்பட்ட சம்பவம் அவரை உணர்ச்சி வசப்படச் செய்து விட்டது... அது அவருடைய தவறா?
நிச்சயமாக இல்லை!
கிமி பிழைத்துக் கொள்ளலாம்.. ஆனால் இப்போதைக்கு எதையும் உறுதியாக சொல்ல முடியாது என்கிறார்கள் டாக்டர்கள்.
மாடஸ்டி.. பினிக்ஸ் பற்றி நீ ஏதாவது கேள்விப் பட்டிருக்கிறாயா?
பினிக்ஸ்? அது ஒரு இரகசிய பயங்கரவாத கும்பலா? இதுவரை நாங்கள் கேள்விப் பட்டதில்லையே!
அஸாடா அந்த கும்பலை சேர்ந்தவன் என்கிற ஒரு உண்மைதான் எனக்குத் தெரியும்!
கிமிக்கு தற்செயலாக அவ்வுண்மை தெரிய வந்திருக்கிறது. அவளுக்கு அதைப் பற்றி வேறெதுவும் தெரியாது.. ஆனாலும் அந்த ஒரு சிறு விஷயம் ஒன்றே அஸாடாவுக்கு போதுமானதாக இருந்திருக்கிறது - அவளை கொன்றுவிட!



கிறுக்குத் தனமாக இருக்கிறதே!
இம்மாதிரி கிறுக்குத் தனங்களுக்கு எப்போதுமே பஞ்சம் இருந்ததில்லை வில்லி!
நான் டோக்கியோ போகிறேன்... அங்கே ஸ்பெஷல் போலீஸில் என் நண்பர் ஒருவர் இருக்கிறார்... பினிக்ஸ் பற்றி அவர் நிச்சயமாக ஏதேனும் தெரிந்து வைத்திருப்பார்.
கஸூமி.. நீங்கள் அனுபவசாலிதான் - விவேகமானவர்தான். ஆனால் கயவர்களின் உலகம் பொல்லாதது... உங்களுக்கு புதிது! நாங்கள் உங்களுக்கு உதவிட சம்மதியுங்கள்.
எங்களுக்கு அந்த வழி - அத்துபடி!
நன்றி.. ஆனால் என் அயல் நாட்டு நண்பர்களை என் குடும்ப விவகாரத்தில் இழுத்துப் போட மனம் ஒப்பவில்லை.
அன்று மாலை -
உன் டிரெஸ் அயர்ன் பண்ணி வந்து விட்டது இளவரசி!
உள்ளே கொண்டு வாருங்கள்.. வில்லி


வந்த வேலை முடிந்து விட்டது.. ஊருக்கு கிளம்பலாம் என்றால் கஸுமி விவகாரம் நெஞ்சை உறுத்திக் கொண்டே இருக்கிறது.
நம் உதவியை அவர் ஏற்றுக் கொண்டிருக் கலாம்.
ஏனோ அதில் அவருக்கு சம்மதம் இல்லை!
நாம் வேறென்ன செய்ய முடியும் -நம் வழியை பார்த்துக் கொண்டு போவதை தவிர!
இன்றிரவு காபுகி தியேட்டருக்கு போவோமா இளவரசி?
ஓ.. போகலாமே!
அந்த நிகழ்ச்சிகள் உங்களுக்குப் பிடிக்குமோ?
பெண் கதாபாத்திரங் களுக்குக்கூட ஆண்களே வேடமிட்டு வருவதைத்தான் என்னால் ரசிக்க முடிவதில்லை!
என்ன செய்வது - ஜப்பானியர்களின் மரபு அப்படி...
அங்கே பார் -கஸுமி!



கிமி எப்படி இருக்கிறாள்?
அவள் பிழைத்துக் கொள்வாள் என்பது உறுதியாகி விட்டது.
ஸ்பெஷல் போலீஸில் இருக்கும் உங்கள் நண்பருக்காவது பினிக்ஸ் பற்றி ஏதாவது தெரிந்திருக்கிறதா?
அப்படியொரு அமைப்பு இருக்கிறது என்று மட்டுமே தெரியுமாம். மேல் விபரம் எதுவும் தெரியாது என்றார்.
இன்னமும் புதிராக நிற்கும் மூன்று கொலைகளுக்கும் பினிக்ஸுக்கும் தொடர்பு இருக்கலாம் என்றொரு வதந்தி நிலவுகிறதாம் - சமூக விரோத கும்பல்களிடையே!
அம்மாதிரி கும்பல்களோடு நிறைய பரிச்சயம் உண்டு எங்களுக்கு!
உங்களுக்கு உதவிட நீங்கள் எங்களை அனுமதித்துத்தான் ஆக வேண்டும்
ஸாரி.. மேடம்! பெண்கள் செய்யும் காரியம் அல்ல அது என்பது என் கருத்து..



உன்னை அதில் ஈடுபடுத்துவது நியாயமல்ல.
அஸாடாவின் மென்னியை நீங்கள் ஒரேடியாக முறித்துப் போட்டிராவிடில் பினிக்ஸ் பற்றி கேட்டறிந் திருக்கலாம்.
உண்மைதான்.. அதற்காக என்னை பழிவாங்க அவர்கள் முயற்சிக்கலாம். இன்னொருவன் சிக்கினால் இப்படி அவசரப்பட்டு ஏதாவது செய்துவிட மாட்டேன்!
கஸுமிக்கு நம் உதவி தேவைப்படலாம் அதை எதிர் பார்த்து நாம் இன்னொரு வாரம் டோக்கியோவில் தங்குவோமா!
அருமையான யோசனை... இளவரசி!
மறுநாள் - கட்டோ, புமியோ சகோதரர்களின் பிரம்மாண்டமான தொழில் நிறுவன கட்டிடத்தின் உள்ளே
வரச் சொல்கிறார்கள்.. போங்கள்
திறந்து வழிவிட்ட கதவு தானாகவே இறுக மூடிக் கொண்டது.
நீதான் உமிஞே -அல்லவா?
உனக்கு ஒரு பணி காத்திருக் கிறது!
பினிக்ஸ் பணி


நானும் என் சகோதரனும் தயாரித்த சிறப்புப் பணி
ஒத்தாசைக்கு ஐந்து ஆட்கள் தரப்படும்
மூன்றாம் நிலை வீரர்களிலிருந்து பொறுக்கி எடுக்கப் பட்டவர்கள்.
அவர்களுடைய பெயர்கள் திட்ட அறிக்கையில் சொல்லப் பட்டிருக்கின்றன.
படித்துப் பார்.
திட்டம் தெளிவாக புரிகிறதல்லவா?
இரண்டாம் நிலை வீரருக்கு இரண்டு நிமிடம் போதுமே - புரிந்து கொள்ள!
புரிகிறது! பிளைஸி என்ற பெண்ணையும், அவளுடைய நண்பன் கார்வினையும் கவர்ந்து வர வேண்டும் - திட்ட விபரங்களும் தெளிவாக உள்ளன.
அபபடியானால் கிளம்பு..
இப்போதே!


நியூயார்க் ஆபீஸுக்கு தொடர்பு கொடு
இலண்டன் ஆபீஸுக்கு தொடர்பு கொடு
பிளைஸியையும், கார்வினையும் கவர்ந்து வருவதில் உமிஞே தோற்றுவிட்டால் அவனை தீர்த்துக் கட்ட ஏற்பாடு செய்திருக்கிறாயல்லவா?
அவனை முதல் நிலைக்கு பதவி உயர்வு செய்வதா வேண்டாமா என்றறிய வைக்கப் பட்டிருக்கும் பரீட்சை யல்லவா இது .!
இரு தினங்களுக்குப் பின் -
நான் பயணித்த டாக்ஸியில் வந்து இடித்த ஆசாமி நல்லெண்ண நோக்கில் நாட்டிய நாடகம் ஒன்றிற்கு ஒரு டிக்கட் அனுப்பி இருக்கிறான் வில்லி.
ஒரு டிக்கட்? - ரொம்ப சந்தோஷம்!
எனக்கும்தான்! சென்ற முறை நாம் போன நாட்டிய நாடக நிகழ்ச்சி முழுக்க நீங்கள் தூங்கி வழிந்ததை நான் மறந்து விட வில்லை!



நீ நாட்டிய நாடகத்திற்குப் போ மாடஸ்டி! நான் என் தோழி டமாகோவைப் போய் பார்த்து விட்டு வருகிறேன்!
நிகழ்ச்சி முடிந்து மாடஸ்டி வெளியே வந்த போது
அதோ.. உயரமாய், கறுப்பாய் இருக்கிறவள்தான்
மிஸ் பிளைஸியா?
ஆமாம்!
மிஸ்டர் கார்வின்தான் சொன்னார் நீங்கள் இங்கே இருப்பீர்கள் என்று... ஒரு சின்ன அசம்பாவிதம் - அவர் போலீஸ் தலைமையகத்தில் இருக்கிறார் இப்போது!
என்ன மாதிரியான அசம்பாவிதம்?
அங்கே சொல்வார்கள்..! ஆனால் நீங்கள் என்னோடு வர வேண்டும் என்று எந்த கட்டாயமும் கிடையாது!
ஆனாலும் நான் வருகிறேன் -உங்களுடைய கார் எங்கே நிற்கிறது?


காரில் -
கார்வினை எதற்காக பிடித்து வைத்திருக் கிறார்கள்?
காரணம் தானே.. வந்து
காரின் கதவு கண்ணாடியில் தெரிந்த பிம்பத்தை கண்ணுற்ற மாடஸ்டி
சட்டென்று உஷாராகி மின்னலாய் பாய்ந்தாள்.
போலீஸ் அல்ல -போலிகள்
லைட்டரையே காங்கோவாக பயன்படுத்தி விளாசினாள்.
அந்த வாயு -துப்பாக்கியை எடு - சீக்கிரம்
மாடஸ்டி ஒருவனை வீழ்த்திவிட்ட போதிலும் -
பட்!
கண்ணாடி கதவு ஒன்று இடையில் மேலெழுந்து காரின் பின் பகுதியை பிரித்து அடைத்தது...
அ..ஹ..


அடேயப்பா.. என்ன ஒரு செயல் வேகம்.
பினிக்ஸின் சேவைக்கு தலைவர்கள் இவளை தேர்ந்தெடுத்தது ஏனென்று இப்போது புரிகிறது.
பத்து நிமிடங்களுக்குப் பின் கார்வின் ஹோட்டலை சென்றடைந்த போது -
மிஸ்டர் கார்வின்?
ஆமாம்!
போலீஸ்? என்ன.. விவகாரம்?
ஜப்பானின் கிழக்கு கடற்கரை பகுதியிலிருந்து ஸேட்டோ நைகை நோக்கி ஒரு சிறு கப்பல் பயணத்தை தொடங்கியது... நூற்றுக் கணக்கான சின்னஞ்சிறு தீவுகளை கொண்ட நெடிய கடல் பரப்பு அது.
அந்தச் சிறு கப்பலின் கேபின் ஒன்றில் -
வில்லி.. விழித்துக் கொள்ளுங்கள்.. நாம் ஆபத்தில் இருக்கிறோம்.. வில்லி எழுந்திருங்கள்
ஒவ்வ...?


என் தலையை உலுப்புவதை தயவு செய்து நிறுத்து இளவரசி.. கழன்று விழுந்து தொலைக்கப் போகிறது.
போலீஸ் ரோந்து வண்டியில் வந்த போலிகள் என்னை ஏமாற்றி பிடித்து வந்து விட்டார்கள்.
என் கதையும் அதுதான்! ம்ம்... ஞாபகம் வருகிறது.. உனக்கு படு காயம்.. ஆஸ்பத்திரியில் இருக்கிறாய் என்று ரீல் விட்டார்கள்.. காரில் ஏறினேன்.. அவ்வளவுதான் -விழித்துப் பார்த்தால் இங்கே இருக்கிறேன்.
வாயு துப்பாக்கியா?
ஆ..ஆமாம்!
நம்மை யார் எதற்காக இங்கே வரவழைத் திருக்கிறார்களோ - தெரியவில்லை!
நம்மை தீர்த்துக் கட்டுவது அவர்களுடைய நோக்கமாக இருக்காது.. இருந்தால் நாம் இப்போது உயிரோடிருக்க மாட்டோம் - இல்லையா?
உன்னுடைய செக்ஸ்டண்ட் கருவி நாம் இப்போது எங்கே இருப்பதாக சொல்கிறது?
நாம் தென் கிழக்கில் போய்க் கொண்டிருக்கிறோம்.. ஜப்பான் கடற்கரையை சார்ந்த பசிபிக்கடலில் இருப்பதாக யூகிக்கிறேன்.


ப:பங்கர பசி.. மூன்று சாப்பாட்டு வேளைக்கும் அதிகமாக நாம் சுயவுணர்விழந்து கிடந்திருக்கக் கூடும்.. கதவை உடைத்து திறக்கட்டுமா?
நாம் விழித்துக் கொண்டு விட்டோம் என்பதை மட்டும் தெரிவித்தால் போதும்.
கார்வின் கதவில் ஓங்கி குத்தலானார்.
சாப்பிட ஏதாவது கொண்டு வந்து கொடுங்கள்.
டம்! டம்! டம்
ஆரஞ்சு ஜூஸ், முட்டை, கோழி வறுவல் ம்ம்.. ப்ளாக் காப்பி - இரண்டு பேருக்கு... - சீக்கிரம்
உங்களுடைய ஆர்டரை குறித்துக் கொண்டு விட்டோம். சப்பளைக்கு ஏற்பாடு செய்யப்படும்.
ஓ.. அப்படியானால் ப்ரைடு ப்ளேட்டும் சேர்த்துக் கொள்ளுங்கள்..
சிற்றுண்டி அடுத்த இருபதாவது நிமிடம் வந்து சேரும்!இடைப்பட்ட நேரத்தில் பினிக்ஸ் பிரதிநிதி வந்து உங்களை சந்திப்பார்.
பினிக்ஸ்?


இப்போது எங்கள் வசம் உள்ள டமாகோ என்ற மங்கையின் உயிர் மீது உங்களுக்கு அக்கறை இருந்தால் பலாத்கார வழிமுறையில் நீங்கள் இறங்கவே கூடாது.
ஓ.. அப்படியா சேதி?
சைத்தான்களா!
குட் மார்னிங்... என் பெயர் உமிடே.. சிற்றுண்டிக்கு முன் தளத்தில் வாக் போக விருப்பமிருந்தால் போகலாம்!
அது எங்களுக்கு தேவைதான்!
டமாகோவும் கப்பலில்தான் இருக்கிறாளா?
இல்லை மிஸ்டர் கார்வின்.. இப்போதும் அவள் டோக்கியோவில் தான் இருக்கிறாள்..
அதிரடியாக ஏதாவது செய்து அவளை மீட்கும் நினைப்பை மறந்து விடலாம்!
சரியான நேரத்தில்தான் வந்திருக்கிறோம். உங்களுக்கு இந்த நிகழ்ச்சி ரொம்ப பிடிக்கும்!



உங்களை இங்கே கொண்டு வர வாய்பு துப்பாக்கியை பயன்படுத்தாமல் தன் திறமையை மட்டுமே நம்பி செயலில் இறங்கி அதில் தோற்றுப் போன ஆசாமிதான் அதோ அங்கே நிற்கிறவன்.
பினிக்ஸில் தோல்விக்கு மன்னிப்பே கிடையாது. சாமுராய் வாளினால் தலை கொய்யப்பட்டு மரணத்தை தழுவிடும் கௌரவம்தான் அவனுக்கு மிஞ்சும்!
ஆஆ.. ஹை!
ஆஆஆஆ!
காரியவாதிகள் நாங்கள் என்று இப்போதாவது உங்களுக்கு புரிந்திருக்குமே!
நன்றாகவே புரிகிறது..
எங்களிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?
நாளை நாம் கரை சேர்ந்த பிறகு போர் தலைவர்களிடம் இருந்து அந்தக் கேள்விக்கு விடை கிடைக்கும் உங்களுக்கு.


யாரிட மிருந்து?
பினிக்ஸின் போர் தலைவர்கள்
கையில் விலங்கு இராது.. உங்களுடைய கேபின் கதவும் தாழிடப்பட மாட்டாது இஷ்டம் போல் கப்பலில் எங்கு வேண்டுமானாலும் நீங்கள் சுற்றித் திரியலாம்.
ஆனால் ஒன்று மட்டும் எப்போதும் உங்கள் நினைவில் இருக்கட்டும்! உங்கள் தோழி டமாகோ அங்கே மரணத்தின் நிழலில் தவித்துக் கொண்டிருக்கிறாள்.. இங்கிருந்து பன்னிரண்டு மணிக்கு ஒரு முறை
இப்போது அவளை கொல்ல வேண்டாம் என்று ரேடியோ மூலம் செய்தி போய்க் கொண்டிருக்கிறது.. கப்பலில் உள்ள ஒவ்வொருவரும் பயிற்சி பெற்ற போர் வீரன்.. மோதினால் மரணத்தை உறுதி செய்யத் தவற மாட்டார்கள். அப்படியே ஒருவேளை அத்தனை பேரையும் நீங்கள் கொன்று விட்டால், செய்தி போகாது –
-டாமாகோ கொல்லப் படுவாள்.. ஜாக்கிரதை!
ஒரு சடங்கு போல் நடக்கும் மரண தண்டனை... போர் வீரர்கள்... கெளரவம்... - இதெல்லாம் பண்டைக் கால சமாச்சாரங்களாயிற்றே.


பெரிதாக எதுவும் இராது இளவரசி... சாமுராய் வாளையும், கராத்தே கலையையும் மட்டும் வைத்துக் கொண்டு நாடுகளை பிடிக்க இந்நாளில் சாத்தியப்படுமோ என்ன?
நாளை தெரிந்து கொள்ளலாம் -உண்மையை! வாருங்கள் சாப்பிடப் போகலாம் -பசிக்கிறது எனக்கு!
சிறு தீவு ஒன்றை நெருங்கியதும் -
அதோ கிபா தீவு -நாம் இறுங்கிய வேண்டிய இடம்!
புது உலகம் ஒன்று துளிர் விடப் போவது இங்கிருந்துதான்!
பார்த்தால் அப்படி தெரிய வில்லையே!
வித்து பூமிக்கு அடியில் முளைவிடுகிறது மிஸ்டர் கார்வின் யுத்தத்தின் போது இரகசிய விமான தொழிற்சாலையாக இயங்கிய இடம் இப்போது பினிக்ஸின் தலைமைய கமாகி விட்டது.



கிபா தீவில் -
இரண்டாம் நிலை வீரன் உமிமே ரிப்போர்ட்டிங் பணி நிறைவேற்றப் பட்டு விட்டது!
புல் தரை போல் காட்சியளித்த உலோக தளம் கீழிறங்கத் தொடங்கியது.
தரையில் 'மைக்' புதைக்கப் பட்டிருக்கலாம்!
கீழேயிருந்து இயக்கப் படுகிறது போலும்!
கீழிறங்கிய தளம் நிலைப்பட்டதும் -
போர் தலைவர்கள் உன்னை எதிர்பார்த்து காத்திருக் கிறார்கள் உமிமே!
சுற்றி வளைத்துச் சென்ற இரகசிய பாதை வழியே மாடஸ்டியும் கார்வினும் அழைத்துச் செல்லப்பட்டனர்
இதுதான் எங்கள் பயிற்சிக் கூடம்!



ஒவ்வொரு பினிக்ஸ் போர் வீரனும், வாள் சண்டை, வில் பயிற்சி, மல்யுத்தம் போன்ற அனைத்து கலைகளிலும் வல்லவன் ஆக வேண்டும் என்பது ஏற்பாடு.
முடிவில்
பணி வெற்றிகரமாக முடிந்து விட்டதை உமிடே தெரிவித்துக் கொள்கிறேன்... இந்த மங்கைதான் பிளைஸி... இவர்தான் கார்வின்.
என் பெயர் கட்டோ!
நான் புமியா!
பினிக்ஸின் போர் - தலைவர்கள் நாங்கள்தான்!
எங்களை இங்கே வர வழைத்த நோக்கம்?
எங்கள் வீரர்களை பயிற்று விக்க வல்லுநர்கள் தேவைப் படுகிறது!
பினிக்ஸில் கட்டாய நியமனம் பெறும் முதல் நபர்கள் நீங்கள்தான்.


திறமையாக போரிடுவதில் தலை சிறந்த வீரர்களின் பட்டியலில் உங்கள் பெயர் இடம் பெற்றிருக்கிறது
..என்று எங்கள் உளவுத் துறை அறிவித்தது
நாங்கள்.. ம்ம்.. போராளிகள் அல்லவே!
அங்கே இங்கே தலை தூக்கும் சிறு பிரச்சனைகளில் தலையிடும் -சாதாரண பிரஜைகள்.
சண்டை போடுவதில் உங்களுக்குள்ள வல்லமை சோதித்து அறியப்படும்.
நீங்கள் உயிர் தப்பினால் முன்னணி வீரர்களாக நியமிக்கப் படுவீர்கள்.
எங்கள் வீரர்களை பயிற்றுவிக்கும் ஆசான் ஆவீர்கள்.
உயிர் தப்பினால்..? -இதற்கு என்ன அர்த்தம்!
போட்டி எல்லாம் 'நீயா - நானா' ரகமாகத் தானிருக்கும்..
வெறும் விளையாட்டுத் திறமையை வைத்து யாரையும் முன்னணி வீரராக நியமனம் செய்வதற் கில்லை!


போட்டி தொடங்கு முன் இந்த பினிக்ஸ் அமைப்பு பற்றி நாங்கள் விபரமாக தெரிந்து கொள்ளலாமா?
நிச்சயமாக! அடுத்த சில ஆண்டுகளில் அணு ஆயுத போரில் சிக்கி இந்தப் பூமி நாசமாகப் போகிறது என்று நானும் என் சகோதரனும் உறுதியாக நம்புகிறோம்.
சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் 'பினிக்ஸ்' எண்ணிக்கையில் சிறியதாக இருந்தாலும் இலட்சியத்தில் வானளாவியதாக இருக்கும்.. சுடுகாடாகிப் போன மண்ணில் வீர தீரம் மிக்க மதிநுட்பம், சாதுரியத்தில் தலை சிறந்த ஒரே சக்தியாக பினிக்ஸ் மட்டுமே மிஞ்சி நிற்கப் போகிறது.
இதெற்கெல்லாம் தேவைப்படும் பணத்தை எங்களுடைய தொழில் நிறுவனங்கள் வாரி வழங்குகின்றன.. தேவையான ஆட்களையும் நியமித்து வருகிறோம்.
நிலத்தடியில் இங்கே அனைவரும் பயிற்று விக்கப் படுகிறார்கள்.. வெளியே அனுப்பப் படும் சிலர் அவ்வப்போது மறு பயிற்சிக்கு இங்கே அழைக்கப் படுவார்கள்.. எந்த ஒரு அவசர பணிக்கும் நொடியில் அவர்களோடு தொடர்பு கொள்ள ஏற்பாடு உண்டு.


பணிவு முழுமையாக இருக்க வேண்டும்
இரகசியம் பராமரிக்கப் பட்டாக வேண்டும்
ஓகோ.. அதனால்தான் அஸாடா கிமியை கொல்ல முயன்றானா?
அணு ஆயுதப் போரின் முடிவில் உலகை நிர்வகிக்கும் பொறுப்பை 'பினிக்ஸ்' சுலபமாக கைப்பற்றிக் கொள்ளும் - அப்படித்தானே?
இல்லை -எங்களுக் கென்ன பைத்தியமா?
முதலில் ஜப்பானை கைப்பற்றுவோம்! பினிக்ஸின் அதிகார வரம்பை மெல்ல விரிப்போம்
பூமியை முழுமையாக ஆக்கிரமிக்க ஒரு தலைமுறை அவகாசமாவது பிடிக்கும்!
உங்கள் வீரர்களை நாங்கள் பயிற்றுவிக்கப் போகிறோமா?
அது - போட்டி முடிவில் நீங்கள் உயிர் வாழ்கிறீர்களா என்பதை பொறுத்தது.
போட்டிகள் எப்போது தொடங்கும்?
இதோ -இப்போதே! அந்தக் கதவை திறந்து உள்ளே செல்லுங்கள்


இந்த விநாடியிலிருந்து உங்களுடைய உயிருக்கு உத்தர வாதம் கிடையாது.. ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுங்கள்.
ஓ.கே.! வில்லி.. கிளம்புங்கள்!
மிச்சத்தை அப்புறமாக பேசிக் கொள்வோம்!
காலியாக கிடப்பது போல் தோற்ற மளித்த அறையின் முகப்பில்..
எதற்கும்..
ஆமாம்.. தேவைதான்!
பொன்னான கண்ணிமைக்கும் பொழுதில் எதிரிகளின் கவனம் திசை திருப்பப்பட்டது.
அந்த விநாடியின் பின்பாதி தொடக்கத்தில் ஒரே பாய்ச்சலாக மாடஸ்டியும், கார்வினும் உள்ளே பாய்ந்தார்கள்.
நல்லவேளை.. ரெண்டே பேர்தான்!
கத்தி..! நன்றாக கையாளத் தெரிந்தவர்கள் போலிருக்கிறது.


மாடஸ்டியும், கார்வினும் முதல் சோதனையை எதிர் கொண்டார்கள்!
கொஞ்சம் கூட கலவரமடைந்ததாகவே தெரியவில்லை - கவனித்தாயா?
ஆமாம்! கதவை தாழிட்டு விட்டு மிச்சத்தை டி.வி. திரையில் பார்ப்போம். வா!
எதிரியின் பலத்தை பார்வை யாலேயே துல்லியமாக எடை போடுகிறார்கள் -கவனி!
அனுபவ முதிர்ச்சியை காட்டுகிறது.. பலே!
எதிரி முன்னேறி வந்து கத்தியை வீசியபோது -
சர்ரக்!
ஒரே குத்தாக குத்த வருவதில் உள்ள ஆபத்தை அறிந்த சமர்த்தன்... விலகி நின்று கையை குறி வைக்கிறான்.
தலை கீழ் வழிமுறை வில்லி
ஓ.கே.!


என்ன பேசிக் கொள்கிறார்கள்?
இங்கிலீஷ் என்று நினைக்கிறேன்.. வார்த்தைகளுக்கு பொருள் இருப்பதாக தெரியவில்லை!
நம் ஆட்கள் 'பாவ்லா' காட்டுகிறார்கள். கத்தி வைத்திருக்கும் கையை பற்ற வரும் எதிரியின் கைதான் அவர்களுடைய இலக்கு!
ஆபத்தான எதிரிகளை வெல்ல கையாளப்படும் மரபு வழி யுக்தி!
ஆனால் எதிரிகள் மரபு வழியை பின்பற்றுபவர்களாகத் தெரியவில்லையே..
அஹ்.. பார் அவளை.. சுத்த பைத்தியக்காரத் தனம்!
எதிரியின் காலை வாரிவிடும் நோக்கத்தோடு சடாரென்று கீழே பாய்ந்த மாடஸ்டியின் நிலை மேலோட்டமாக மிகவும் பரிதாபகரமாகத் தோன்றியது!
வில்லி!


அஹ்!
கத்தியை கீழ் நோக்கிப் பாய்ச்ச எதிரி சற்று குனிந்தபோது –
'தலை கீழ்' முறையில் அவனுடைய தாடையில் ஓங்கி விட்டார் ஒரு உதை!
சத்!
கார்வின் உயர்த்திய காலை மீண்டும் தரையில் பதித்த கணத்தில் அவருடைய எதிரி அவரை நோக்கி வந்தான்.
ஆனால் -
மடேர்!
அடேயப்பா.. என்ன ஒரு லாவகம்!
இப்படியொரு திறமையைத்தானே பயிற்சியாளர்களிடம் நாம் எதிர்பார்க்கிறோம்!



உங்களுடைய எதிரிகள் தோற்று விட்டனர் -அவர்களை நீங்கள் கொல்ல வேண்டும்!
அவர்களை உங்களிஷ்டப்படி என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள்...
எங்கள் கைகளை கறைப்படுத்திக் கொள்ள இஷ்டமில்லை!
இப்போது திறக்கும் கதவு வழியே முன்னேறிச் செல்லுங்கள்.. அதிரடி தாக்குதல் இராது... அடுத்த போட்டி முற்றிலும் வேறுவிதமாக இருக்கும்.
அடுத்த போட்டி நீண்ட, குறுகிய ஹாலில் நடக்க விருந்தது..
என்ன வகையான போட்டி இது..? பறந்து வரும் தோட்டாவை ப்ல்லிடுக்கில் பிடிக்கச் சொல்வார்களோ?



அப்படியெல்லாம் இல்லை கார்வின்.. அந்தப் பெண்மணிக்கு வில்வித்தையில் உள்ள தேர்ச்சியை கண்டறியும் சோதனை... அந்த இலக்கை மாட்டிக் கொள்..
இலக்கு?
நாற்படி அடி தொலைவிலிருந்து அந்த இலக்கை நீ அடிக்க வேண்டும் பெண்ணே.. முயற்சிக்க நீ மறுத்தால் கார்வின் சுடப்படுவார்.
வில்லை வாங்கி மாடஸ்டி பயிற்சி மேற்கொண்ட நிமிடங்களில் -
கார்வின் உன் இடத்தில் போய் நில்
..அந்த மங்கோலிய வியாபாரி குடியானவப் பெண்ணிடம் சொன்னான்..
மிச்சக் கதையை அப்புறமாகச் சொல்கிறேன்!
உன் மனோ திண்மைக்கு இது ஒரு சோதனைதான்! மனத்தை தொய்ய விடாதே.. இளவரசி
ஈவிரக்க மற்ற கிராதகர்கள்!


அம்பை நாணேற்றினாள் மாடஸ்டி
இலக்கு மட்டும்தான் அங்கே இருக்கிறது... வில்லி அங்கே இல்லை... அவர் என் பின்னால் நின்று நடப்பதை வேடிக்கை பார்க்கிறார்.. இலக்கு மையம் மட்டுமே என் எதிரே இருக்கிறது.
இலக்கு மட்டும்தான் உன் பார்வைக்கு புலனுகை வேண்டும் பெரிதாக.. கால் பந்து அளவுக்கு..
...உணர்ச்சிகளுக்கு இடம் கொடாதே... ம்ம்.. உன்னால் முடியும்..
மாடஸ்டி செலுத்திய அம்பு அந்த -மர வட்டத்தில் குத்தி பின் பக்கம் இருந்த உலோக தகட்டை தாண்ட முடியாமல் தடுமாறி நின்றது.
அஹ்!
சத்!
இரண்டாவது சோதனை முடிந்தது.
தூள் கிளப்பி விட்டாய்.. இளவரசி! மையப் புள்ளிக்கு அரை அங்குலத்திற்கும் குறைவான விலகலில் அம்பு பாய்ந்திருக்கிறது.
சிறாய்ப்பு ஏதாவது.. உங்களுக்கு -
முஷ்டியால் குத்து விட்ட மாதிரி இருந்தது அவ்வளவுதான் - கைனடிக் எனர்ஜியின் பெரும் பகுதி கட்டையில் பரவலாகி..


..அதாவது ஐம்பது அடிக்கு ஒரு பவுண்டு என்று கணக்கிட்டால்..
ஐய.. நீங்களும் உங்கள் சமன்பாடும்! அதற்கெல்லாம் இதுவா தருணம்?
அடுத்த சோதனையை நீங்கள் எதிர் கொள்ளு முன் -
- உங்களுடைய எதிரியின் வல்லமையை சரிவர புரிந்து கொள்ளுங்கள்.. இதோ -
ஒரு திறப்பின் வழியே பார்த்தபோது -
ஒருவன் கைத்துப்பாக்கியை கையாளுவதில் நிகரற்றவன் மற்றவன் கத்தி வீசுவதில் ஈடு இணையற்றவன்
அதை தொடர்ந்து சீறிக் கொண்டு சென்ற தோட்டாக்களும் மின்னலாய் பறந்த கத்திகளும் மயிர்க்கூச் செரிய வைத்தன.


மெல்லச் சுழன்று கொண்டிருந்த இலக்கை அவை தப்பாமல் தாக்கின.
அவன் பிரயோகிக்கும் மஸாஷி ரக கத்தி மீது ஒரே பைத்தியமாய் நான் ஒரு காலத்தில் தினம் ஆறுமணி நேரம் பயிற்சி எடுத்தது நினைவிருக்கிறதா இளவரசி?
கைத் துப்பாக்கியை கையாளுவதில் நான் மட்டும் சளைத்தவளா என்ன ?
''மாதிரி'' நிகழ்ச்சி முடிந்ததும்
அறைக்குள்ளே நுழைந்து இரட்டையர் 'நீயா - நானா' சவாலுக்கு ஆயத்தமாகுங்கள்.. நிபந்தனைகள் விளக்கப்படும்.
பார்த்த மட்டிலும் நம்மை மிஞ்சியவர்களாகத் தோன்றுகிறது!
மித மிஞ்சிய வேகம்தான்
நம்மை தளர்ச்சி யடையச் செய்யவே அந்த ''மாதிரி'' காட்சி
வேகம் அவர்களிடம் இருக்கிறது... நம்மிடம் விவேகமும் இருக்கிறது. பார்த்து விடலாம்.



உங்களுக்கான ஆயுதங்கள்..! எடுத்து பரிசீலனை செய்ய அனுமதி உண்டு!
ஜோர்தான்!
சரி.. ஆயுதங்களை கீழே வையுங்கள்!
ஒவ்வொரு டேபிளிலும் ஒரு சிவப்பு விளக்கு எரிந்தது
மேஜையின்
மேற்பரப்பிலும், ஆயுதங்களிலும் இப்போது மின்னோட்டம் இருக்கிறது. எனவே -
அவசரப்பட்டு முந்திக் கொள்ள யத்தனிக்காதீர்கள்!


வைத்த விழி வாங்காமல் உறுத்துப் பார்ப்பதை கவனி...
எதிரியின் மனோபலத்தை சிதறடிக்கும் 'கி'யின் சக்தியை அறிந்தவர்கள்
நம் ஆட்களுக்கும் அது தெரிந்தது தானே!
எச்சரிக்கை விளக்குகள் அணைந்ததும் போட்டி ஆரம்பமாகிறது.
வினாடிகள் ஊர்ந்தன..
அவர்களை பொறுமை யிழக்கச் செய்தது போதும் -சுவிட்சை அழுத்து புமியா!
விளக்குகள் அணைந்த கணத்தில் நான்கு கரங்கள் மின்னல் வேகத்தில் ஆயுதங்களை நோக்கி நீண்டன... செயல் வேகம் மிக்க அந்த ஜப்பானியர்கள் முந்திக் கொண்டார்கள்.
மாடஸ்டியும், கார்வினும் பின் த ங்கி விட்டார்கள். ஆனால் -


துப்பாக்கியை உயர்த்தாமல் அப்படியே விசையை இழுத்தாள் மாடஸ்டி..
க்ராக்!
கார்வினும் புஜத்தை உயர்த்தி கத்தியை வீச முற்படாமல் மணிக்கட்டு, முன் கையில் பலத்தை ஒருங்குவித்து கத்தி மேஜையிலிருந்தவாறே பறந்து செல்லுமாறு விசிறினார்.
அந்த யுக்தி அவர்களுக்கு வெற்றி ஈட்டித் தந்தது.
ஆஆ!
ஆஆ!
அப்பப்பா... என்ன ஒரு வேகம்!
தொலைந்தோம் என்று தான் நானும் முதலில் நினைத்து விட்டேன்.
அடடா.. என்ன ஒரு தன்னம்பிக்கை - மனவுறுதி!
நம் வீரர்களை பயிற்று விக்கப் போகிறவர் களிடம் நாம் எதிர்பார்க்கும் திறமை இதுதானே!


கண்ட்ரோல் அறைக்கு திரும்பி வருமாறு மாடஸ்டியும் கார்வினும் அழைக்கப்பட்டனர்.
அனைத்து சோதனைகளிலும் தேறிவிட்டீர்கள். 'அசகாய சூரர்கள்' என்கிற அந்தஸ்தில் உங்களை நியமனம் செய்கிறோம்.
பினிக்ஸ் வீரர்களுக்கு நீங்கள் பயிற்சி யளிக்க வேண்டும்!
ஹொக்கைடோ வினுள்ளே எங்கள் மாளிகையில் உங்களுடைய தோழி டமாகோ எங்களிடம் சிறைப்பட்டிருக் கிறாள் என்பதையும்,
கடமையை நீங்கள் செய்யத் தவறினால் அவள் கொல்லப் படுவாள் என்பதையும் எப்போதும் நினைவில் வைத்திருங்கள்.
சாதுரியமான முன்னேற்பாடு தான். ஆனால் எங்களுக்கு உண்மையிலே உங்களுடைய அமைப்பின் மீது அபிமானம் ஏற்பட்டு விட்டது!
இது என்ன புதுக் கதை!
வரப் போகும் அணு ஆயத போரின் முடிவில் சில நூறு பேர் மட்டுமே இந்த பூமியை உய்விக்க முடியும் என்ற தத்துவத்தில் உங்களுக்கு நம்பிக்கை வந்து விட்டதா?
அட.. நிஜம்தானா?
நிச்சயமாக! 16 ஆம் நூற்றாண்டில் மெக்ஸிகோவில் நடந்தது என்ன? விரல் விட்டு எண்ணக் கூடிய ஸ்பானிஷ் வீரர்கள் நூற்றுக் கணக்கான அஸ்டெக் வீரர்களை வென்று ஒரு கண்டத்தையே வசப்படுத்தவில்லையா? அவர்கள் இலட்சிய வெறி கொண்ட புலிகள்!


மாந்தர்கள் வெறும் செம்மறியாட்டுக் கூட்டம்தானே! மீண்டும் நாம் வில் - அம்பு கலாச்சாரத்திற்கு திரும்பிச் சென்ற பின் இருக்கிற ஒரு சில புலிகளின் கைதானே ஓங்கி நிற்கும்! பினிக்ஸின் இலட்சியம் சரியானது - மகத்தானது.
ஓ பரவா யில்லையே..!
நீங்களாகவே மனமுவந்து எங்கள் இயக்கத்தில் சேர முன் வந்ததை வரவேற்கிறோம்.
ஆனாலும் ஒரு முன்னெச்சரிக்கை ஏற்பாடாக உங்களுடைய தோழி டமாகோ தொடர்ந்து மரணத்தின் நிழலில்தான் இருந்து வருவாள்.
சைத்தானே!
நியாயம் தானே? எங்களுடைய விசுவாசத்தை இதற்குள் புரிந்து கொள்ள முடியாதுதான்.
இன்னமும் நாங்கள் அந்நியர்கள் தானே!
சரி.. வாருங்கள் போய் பயிற்சிக் கூடத்தை சுற்றி வருவோம்.
இந்தா மாடஸ்டி.. உன்னுடைய கைப் பையிலிருந்து எடுக்கப்பட்ட காங்கோ. இந்த அற்புதமான ஆயுதத்தை கையாளும் யுக்தியை எங்களுடைய வீரர்களுக்கு சொல்லிக் கொடு!
வாள் வீச்சுக் கலை - உன் ஸ்பெஷாலிட்டி களில் ஒன்று.. இல்லையா மாடஸ்டி?



எவ்வகையான சண்டை முறையை நாங்கள் பயிற்று விக்க வேண்டும்?
எல்லா வகை பயிற்சிகளையும் மேற்பார்வையிட வேண்டும்.
எல்லா சண்டை முறைகளிலும் வல்லவர்கள் எங்களிடம் இருக்கிறார்கள்.. ஆனால் அவர்களுக்கு அரிய யுக்திகளையும், சூட்சுமங்களையும் நீங்கள் கற்றுத்தர வேண்டும்..
ம்ம்.. சுய ஆற்றல், தனி வழி முறை, மனோ வசியம் - இந்த மாதிரி!
துப்பாக்கி பயற்சி எங்கேயும் நடக்கக் காணோமே!
பலவகை துப்பாக்கிகள் ஏகப்பட்டவை இருக்கின்றன. ஆனால் அவற்றில் நாங்கள் பயிற்சி தருவதில்லை.
துப்பாக்கி ஓர் ஊன்றுகோல் மாதிரி - பலவீனமானவனையும் வீரனாக காட்டக் கூடியது! ஆட்களை தரமான முழு வீரர்களாக உருவாக்குவதே எங்கள் முதல் இலட்சியம்!
அந்தக் காலத்து சாமுராய் வீரர்களெல்லாம் துப்பாக்கியை நம்பி இருந்தனரா - என்ன?
சத்தியமான வார்த்தை!



பயிற்சியாளர்களுக்கான குவார்ட்டர்ஸில் இது உனக்குரிய அறை - கார்வின்! மாடஸ்டி பெண் ஊழியைகளுக்கான குவார்ட்டர்ஸில் தங்கட்டும்!
உங்களுக்குத் தேவையானவை அனைத்தும் கொடுக்கப்படும். மற்ற பயிற்சியாளர்களோடு சேர்ந்து உணவருந்துங்கள்.. நாளை காலை 8.00 மணிக்கு உங்களுடைய பணி தொடங்கும்.
அந்த வேளையை ஆவலோடு எதிர்பார்க் கிறோம்!
மறுநாள் -
குட் மார்னிங்.. இளவரசி
குட் மார்னிங்.. வகுப்பை தொடங்கு முன் நாம் ஒரு ஐந்து நிமிடம் கைகால்களுக்கு பயிற்சி எடுத்துக் கொள்வோமே!
பயிற்சி எடுத்துக் கொள்ளும் சாக்கில் தனித்து உரையாட ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொண்டார்கள்.
ஏதாவது யுக்தி புலப்பட்டதா?
இன்னும் இல்லை!
டமாகோ அவர்கள் வசம் இருக்கும் வரை எந்த விஷமமும் செய்ய முற்படக் கூடாது..
நாம் இங்கிருந்து வெளியேறாத வரை அவளுக்கு உதவிடவும் முடியாது.. பாவம்



எக்கச் சக்கமாக மாட்டிக் கொண்டு விட்டோம்.. ஏதாவது வழி முறை புலப்படும் வரை நல்ல பிள்ளைகளாக நடந்து கொள்வதே விவேகம்!
அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறாய் புமியா?
நம் இலட்சியத்திற்கு மிகவும் பிரயோஜனமாக இருப்பார்கள்
ஆனால் கிடைக்கும் முதல் வாய்ப்பில் நமக்கு துரோகமிழைக் கவும் தயங்க மாட்டார்கள்!
எனவே, துரோகமிழைக்க வாய்ப்பே கிடைக்காது.. ஆறு மாதத்தில் அவர்களுடைய பணி முடிந்து விடும் - தீர்த்துக் கட்டி விடுவோம்!
பினிக்ஸ் வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதில் தங்களை மும்முரமாக ஈடுபடுத்திக் கொண்டனர் மாடஸ்டியும், கார்வினும்.
தற்காப்பு முயற்சியிலேயே இருக்கக் கூடாது. அடிப்படை தவறு இருக்கிறது உன்னிடம்.. அது என்னவென்று வா உனக்கு புரிய வைக்கிறேன்.


இது பயிற்சிதான் என்பதை மறந்து விட்டு என்னைத் தாக்கு நாகாஞே.. நான் உன் எதிரி.. என்னை நீ வீழ்த்தத் தவறினால் நீ மடிவது உறுதி என்கிற மாதிரியான நிலை... கவனமாகச் செய்.
நான் வெகு ஜாக்கிரதையாக இருப்பேன்.
நாகாஞே எச்சரிக்கையோடு போரிட்டான்.. ஆனால் மாடஸ்டி
தன் வாளை அவனுடைய கால்களை குறித்து வைத்து தூக்கிப் போட்டாள்.
படீர்
குழம்பிப் போன நாகாஞே அந்த வாள் தன் காலை பதம் பார்த்துவிடாம லிருக்க தன் வாளை தடையாக கொண்டு வந்தான்.
ஏமாந்து விட்டாய்.. இதைத் தான் நான் எதிர்பார்த்தேன்.
அஹ்!
கூடவே இரண்டு கைகளும், கால்களும், அத்தோடு மூளையும் இருப்பதை அறவே மறந்து போய் விடுகிறாய்.
உன் எண்ணவோட்டம் குறுகிய வட்டத்திற்குள்ளேயே இருப்பதுதான் உன்னிடம் உள்ள குறை.. கையில் வாள் இருந்தால் சிந்தனை முழுக்க அதைச் சுற்றியேதான் இருக்கிறது.
மேடையில் வேடிக்கை காட்ட அல்ல... சண்டையில் சமாளிக்கவே பயிற்சி தரப்படுகிறது.. மறந்து விடாதே.


அங்கே கார்வின் -
நோ.. நோ.. நிறுத்துங்கள்! பின்னாலிருக்கும் மனிதன் உன் கதையை முடிக்க வாய்ப்பளித்து விட்டாயே டோகுஸா!
அது உனக்கு.. புரியாது..! ம்ம்.. முதல் மனிதனை நீ சமாளிக்கும் அதே சமயத்தில் அடுத்த நபரை குறி வைக்க வாகான நிலைக்கும் வந்து விட வேண்டும்.. இதுவாவது புரிகிறதா?
ஸ்னூக்கரா..?
கற்பனை வளம் போதாது உனக்கு.. மூவரை ஒருங்கே நீ எதிர் கொள்ளும் போது ஸ்னூக்கர் ஆட்டத்தில் பயன்படுத்தப்படும் யுக்தியை நீ கையாள வேண்டும்.
ம்!
மூவரும் சேர்ந்து என்னைத் தாக்க வாருங்கள்.. எப்படி சமாளிக்கிறேன் -பாருங்கள்
சொன்னதை செய்து காட்டினார் கார்வின்
இடது கையால் முதில் எதிரியை தாக்கும் போது இடது கால் வலுவாக நிலை கொண்டிருக்கும்.


அதே நிலையில் வலது காலை உயர்த்தி இரண்டாமவனை அதிரடியாக வீழ்த்த வேண்டும் - அவன் இதை எதிர்பார்த்திருக்கவே மாட்டான்.. சுலபமாக சுட்டு விரலால் கூட வீழ்த்திவிடலாம்.
சத்!
முடிவுரையாக -
அதே வேகத்தில் கையை கீழே ஊன்றி அடுத்த காலினால் மூன்றாமவனை அதிரடியாக தாக்க வேண்டும்.
அத்தனையும் கண்ணிமைக்கும் பொழுதுக்குள் நடந்து முடிந்து விட வேண்டும். எதிரிகள் சுதாரித்துக் கொள்ள அவகாசமே தரக் கூடாது..
உங்களுடைய போதனை இவன் செவியில் ஏறவே யில்லை என்று நினைக்கிறேன்..
வாருங்கள்.. சாப்பிட போகலாம்.
பயிற்சியாளர் களின் சாப்பாட்டுக் கூடத்தில்..
போர் - தளபதிகள் எங்கே காணோம்? வழக்கமாக நம்மோடு சாப்பிட வந்து விடுவார்களே!



தொழில் விஷயமாக டோக்கியோ போயிருக்கிறார்கள்.
வார இறுதியில் திரும்புவார்கள்.. அப்போது உன்னை அயர வைக்கும் செய்தி வந்து சேரக் கூடும் மிஸ் பிளைஸி!
தொடர்ந்த நாட்களில் -
உன் அறிக்கையின்படி யுகியோதான் தலை சிறந்த மாணாக்கன் -இல்லையா!
ஆமாம் - பலே கில்லாடி.. அவன்!.
அவனை வெல்ல யாராலும் முடியாது.
கஸுமியைப் போல் அவனும் ஒரு சகலகலா வல்லவன்.
கற்றுக் கொண்டதை நடைமுறையில் செயல்படுத்த அவனை டணிக்கப் போகிறோம்.
கஸுமி..! ஆமாம்! நம் ஆட்களில் ஒருவனை கொன்றவரா யிற்றே!
பினிக்ஸைப் பற்றி தகவல் சேகரித்து வருகிறார் அவரைத் தீர்த்துக் கட்ட யூகியோவை அனுப்பலாம்!


கஸுமியை யுகியோ நிச்சயம் தோற்கடித்து விடுவானா?
நிச்சயம் ஒன்று நான் சொல்லி விட்டால் பிறகு
அது சரியான பரீட்சையாக இல்லாது போய்விடுமே!
ஆயுதம் ஏதுமின்றியே அவரை யுகியோ கொன்றால்தான் பெருமை.. வேண்டுமானால் காங்கோவை பிரயோகிக்கட்டும்
சரியாகச் சொன்னாய்.. யுகியோ எந்த ஆயுதத்தை கையாள வேண்டும்!
கஸுமி தேர்ந்த போராளி என்ற போதிலும் வயதான கிழவர்.
காங்கோ..! சூப்பர் ஐடியா! உன்னுடைய சிறப்பு ஆயுதம் அல்லவா அது!
மாடஸ்டியும் கார்வினும் உரையாடிக் கொள்ள வாய்ப்பளிக்கும் உடற்பயிற்சி வேளை ஒன்றில் -
கஸுமிக்கு செய்தியனுப்ப வாய்ப்பு கிட்டியிருக்கிறது. அவர் மட்டும் டமாகோவை விடுதலை செய்து விட்டார் என்றால் நாம் இப்படி அடி பணிந்து கிடக்கத் தேவையில்லை.
குட்..! ஆனால் இது எப்படி சாத்தியம்?
கஸுமியை கொல்ல யுகியோவை அனுப்புகிறார்கள். ஆனால் அவரிடம் இவனுடைய பாச்சா பலிக்காது. அவனையும் அறியாமலே நம் செய்தியை கஸுமிக்கு கொண்டு செல்லப் போகிறான்.



அன்று மாலையில்
டோக்கியோவுக்கு இன்றிரவு கிளம்புகிறேன் மிஸ் பிளைஸி -கஸுமியை கொல்ல காங்கோவை எடுத்துப் போகிறேன்.
என் சொந்த, ராசியான காங்கோவையே உனக்கு கொடுத்தனுப்பத் தீர்மானித்திருக்கிறேன்.
டோக்கியோ -கஸுமியின் வீட்டில்
யாரது?
ஏ.. கிழவா -எழுந்திரு! உன் கதையை முடிக்க வந்திருக்கிறேன்
யார் நீ?
பினிக்ஸிலிருந்து வருகிறேன்... கடைசி பிரார்த்தனையை சொல்லிக் கொள்..
காங்கோ..? மாடஸ்டியின் சிறப்பு ஆயுதம்!
அடுத்த முப்பது வினாடிகளில் இருவரும் ஆவேசமாக பொருதிக் கொண்டனர்.


திறமை இருக்கிறது.. ஆனால் அவசரப் படுகிறான்
-காங்கோவை பிரயோகிக்க வாய்ப்புத் தேடுகிறான்.
வாய்ப்பளிப்பது போல் பாசாங்கு செய்து அவனை அருகில் வரவழைத்து ஒரு மரண வெட்டு கொடுத்தார் கஸூமி!
அஹ்!
பட்!
ஸ்பெஷல் போலீஸில் உள்ள தன் நண்பனுக்கு தகவல் கொடுத்தார் கஸூமி.
செத்து விட்டான்!
ஆனால் மரணம் என்னால் சம்பவிக்க வில்லை.
வாய் ஓரத்தில் சயனைட் நாற்றம் வருகிறது - கவனி
இம்முறையும் பினிக்ஸை பற்றி தெரிந்து கொள்ளும் வாய்ப்பை இழந்து விட்டோம்.
மாடஸ்டியின் சொந்த காங்கோவல்லவா இது! இவனுக்கு எப்படிக் கிடைத்தது..? அவளை கொன்று விட்டார்களா? அல்லது அவளே கொடுத்தனுப்பினாளா..? அவளே கொடுத்தனுப்பியிருக்கும் பட்சத்தில்.. நோக்கம்?


நிச்சயமாக தெரியுமா - இது மாடஸ்டி யினுடையதுதான் என்று?
ஆமாம்.. பல முறை பார்த்திருக்கிறேன்.. ஒரு முனை திருக வரும்.. பிடியினுள்ளே காலியாக இருக்கும்..
..மயக்க மருந்தை மறைவாக வைத்து எடுத்துச் செல்ல
இருக்கலாம் -அட.. இது என்ன?
அவளே எழுதி அனுப்பியிருக்கும் நீண்ட செய்தி.... நுண்ணிய எழுத்துக்களில்.. படிக்க உருப்பெருக்கி தேவைப்படலாம்!
கடலுக்கடியில் உள்ள பினிக்ஸ் அமைப்பில்
யுகியோ போய் மூன்று நாளாகியும் அவனிடமிருந்து தகவல் ஏதும் வரக்காணோம்.. அவனும் சரி.. கஸுமியும் சரி மாயமாக மறைந்து போய் விட்டனர்..
உன் மாணாக்கன் தோற்றுவிட்டான் என்றாகிறது!
பயிற்சியில் சிறப்பாக செய்பவர்கள் நடைமுறை என்று வரும் போது தாக்குப் பிடிக்க முடியாது போகிறது - இதற்காகத்தானே 'டெஸ்ட்' என்றெல்லாம் வைத்து பரீட்சிக்கிறோம்.


காலை பயிற்சிக்குப் பின் குளிக்கச் சென்ற போது -
ஒட்டுக் கேட்பார்களோ என்ற பயம் இல்லாமல் உரையாட ஓர் அரிய வாய்ப்பு.
நீ சொல்வது சரிதான்.. ஆனால் அதிகப் பிரசங்கித்தனம் வெளிப்படுகிறது உன் பேச்சில். போய் உன் பணியை செய் - மீண்டும் இம்மாதிரி பிழை நேராமல் பார்த்துக் கொள்!
மாடஸ்டியின் குளியலறைக்கு அடுத்திருந்ததை கார்வின் தேர்ந்தெடுத்துப் புகுந்தார்.
யுகியோ திரும்பி வரவில்லை எனில் கஸுமி அவனை தீர்த்து கட்டியிருக்கக் கூடும்.
ஆமாம்.. அப்படியிருந்தால் என் செய்தியையும் காங்கோவிலிருந்து அவர் கண்டெடுத்திருக்கக் கூடும்.
டமாகோவை அவர் விடுவித்த பின் எப்படி நமக்கு செய்தியனுப்பப் போகிறார்?
தெரியவில்லை! ஆனால் அவருக்கு மேலிடத்தில் நிறைய செல்வாக்கு உண்டு..
டமாகோவை விடுவித்ததும் உடனடியாக ஒரு சிறு படைப்பிரிவை நகர்த்தி வந்து இந்த இரகசிய தளத்தை தாக்க அவர் ஏற்பாடு செய்தால் எல்லாம் நலமாக முடியும்.




ஆமாம்.. அவள் விடுவிக்கப்பட்ட செய்தி இந்த பயல்களுக்கு எட்டிய மறு கணமே நம் கணக்கை தீர்த்து விடும் அபாயமுண்டு!
விவகாரம் வெளியே வராதவாறு இரகசியமாக செயல்படச் சொல்லி கஸுமியை எச்சரித்திருக் கிறேன்.
காரியம் நாம் எதிர்பார்க்கிற மாதிரி நடக்காவிடில் நாம் உயிர் பிழைக்க முன் கூட்டியே, இப்போதே சில ஏற்பாடுகள் செய்து வைக்க வேண்டும்!
ஹொக்கைடோவில் - பினிக்ஸ் சகோதரர்களின் மாளிகையைச் சேர்ந்த வேலையாள் வெளியில் சென்றுவிட்டு திரும்பி வந்த போது
போலீஸ் கார்கள்..! ரெய்டு நடந்திருக்கிறது! அந்தப் பெண்ணை கொல்லு முன் மீட்டு விட்டார்கள்!
மாடஸ்டி & கார்வினை பணிய வைக்க டமாகோ கைதியாக வைக்கப்பட்டிருந்த மாளிகை அது!
இரண்டு மணி கழித்து -
போர் தளபதிகளுக்கு தலை போகிற அவசரச் செய்தி -உடனடியாக அனுப்பு!



புமியா! இரண்டு மணி நேரத்திற்கு முன் ஹொக்கைடோவிலுள்ள நம் மாளிகையை ஆயுதப் போலீஸார் தாக்கி டமாகோவை மீட்டதோடு நம் ஆட்களையும் கைது செய்திருக்கிறார்கள்.
ஆமாம்..! உடனடியாக அபாய எச்சரிக்கை செய்தியை ஒலிபரப்பு!
அதாவது - !
அனைவருக்கும் ஓர் அவசரச் செய்தி...
மாடஸ்டியையும், கார்வினையும் பிடியுங்கள்.. உடனடியாக -இக்கணமே!
போர் தளபதிகளோடு நாங்கள் பேசி ஏற்பாடு செய்த ஒரு நடைமுறை பயிற்சி இது.. என் கடிகாரம் சற்று தாமதமாக ஓடுவதால் நான் தயார் நிலையில் இல்லை..
எச்சரிக்கை செய்தி ஒலிபரப்பானதும் மாடஸ்டி 'ரீல்' விட்டாள்.
எமர்ஜென்ஸி.. மாடஸ்டியையும், கார்வினையும் பிடியுங்கள்.
செய்தியை எல்லோரும் கேட்டீர் களல்லவா?
வந்து..



தேடிப் பிடித்து கொண்டு வாருங்கள்.. அவர்களை!
நகாஷே நீதான் பொறுப்பு அதிகாரி... ஆளுக்கு ஒரு வாள் கொடு... சீக்கிரம்! நான் இரண்டாவது தளத்தை சென்றடைய அவகாசம் கொடுத்து உன் வீரர்களை என்னைப் பிடிக்க அனுப்பு.
கார்வினையும் -மாடஸ்டியையும் பிடியுங்கள்!
மாடஸ்டி தந்திரத்தை கையாண்டு தப்பிக்க முயற்சித்த அதே வேளையில் கார்வின் நேரடி வழிமுறையில் இறங்கி விட்டார்.
மடேர்!
மடேர்!
இது ஒரு யுக்தி -ஒரே சமயத்தில் பல பேரை அடித்து வீழ்த்தி விடலாம்!
கும்
பண்டை கால ஆயுதம்... எப்போதும் கை கொடுக்கும் -கையாள சிரமமே இராது!
நீங்களே இப்போது நேரில் பார்த்தீர் கள், ல்லவா?


தன் மாணாக்கர்களிட மிருந்து கார்வின் தப்பியோடினார்.
இருவரையும பிடித்தானதும் உடனடியாக கண்ட்ரோலுக்கு தகவல் கொடுங்கள்.
..மாடஸ்டி கார்வினோடு சேர்ந்து கொள்ள ஓடினாள். வழியில் உள்ளுணர்வு திடீரென எச்சரிக்கை விடுக்க சற்றே பதுங்கினாள்.


இதோ பார் உமேஸா.. வாள் உன் வசம் இருந்தாலும் கூட என்னை நீ வெற்றி கொள்ள முடியாது.. எப்படி என்கிறாயா.. பார்.. என் யுக்தியை கவனி..


மாடஸ்டி அவனுடைய கவனத்தை தன் பக்கம் ஈர்த்து நிறுத்தினாள்.
நல்ல காரியம் பண்ணினாய்.. இளவரசி!
என் யுக்தியை இப்போது புரிந்து கொண்டிருப்பான் - நிச்சயமாக!



மாடஸ்டியையும், கார்வினையும் பிடிக்கும் முயற்சியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை தெரிவிக்கவும்.
ஆயுத சாலையில்
இவனுடைய கத்தியை எடுத்துக் கொள்கிறேன்.
ஆயுத கிடங்குக்கு போவோம் -வாருங்கள்!
சாவிக் கொதது?
இதோ பெல்ட்டில் தொங்குகிறது!
மேலும் மூன்று - மெஷின் கன்கள், டஜன் கை வெடி குண்டுகள், சுமக்க முடியக் கூடிய அளவுக்கு தோட்டாக்களை அள்ளிச் செல்வோம் வில்லி!
இன்றைக்கு நாம் தூங்கப் போவதில்லை என்று தோன்றுகிறது.
அவர்களை பிடிக்க இன்னும் ஏன் தாமதம்?



வளாகம் மிகப் பரந்தது அல்லவா.. இருவர் ஒளிந்து கொள்ள
ஏகப்பட்ட இலக்குகள் இருக்கின்றனவே!
அவர்கள் ஓடி ஒளியும் ரகமல்லடா.. முட்டாள்! நேரடி நடவடிக்கையில்
நம்பிக்கை வைத்திருக்கும் அடாவடி பேர்வழிகள்!
ஆயுத சாலை..! புமியா - அதை மறந்து விட்டோமே!
டி.வி. திரையில் ஆயுத சாலையை கொண்டு வந்தான் - கட்டோ..!
ஆமாம்.. அவர்கள் அங்கேதான் இருக்கிறார்கள்.
அனைத்து வீரர்களும் ஆயுத சாலைக்கு விரையுங்கள்.
நம்மை டி.வி.யில் கண்டு கொண்டு விட்டார்கள் போலும்.
ஜங்ஷன் - பாக்ஸ் இதோ இருக்கிறது... சர்க்யூட்டை நான் சிதறடிக்கிறேன்!
டி.வி. திரை ஓய்ந்து அடங்கு முன்..
சீக்கிரம் ஆகட்டும் வில்லி! பாதையில் தடை எழுமுன் நாம் மின் நிலையத்தை சென்றடைய வேண்டும்!
நாம் கேட்டுக் கொண்டிருக் கிறோம் என்பதை மறந்து விட்டாள் போலும்!


பொது அறிவிப்பு கூடாது.. மின் நிலையம் செல்லும் வழி அனைத்திலும் தடை எழுப்பவும்.
ஆனால் மாடஸ்டியும், கார்வினும் மாற்று வழியில் முன்னேறி னார்கள்..
தந்திரமாக அவர்களை ஏமாற்றி விட்டாய் மாடஸ்டி.. இப்போது ஒரு பயல் குறுக்கே வரமட்டான்..
நீங்கள் வைத்துவிட்டு வந்த வெடிகுண்டு நேரத்தில் வெடிக்க வேண்டும்.. ஆயுதங்கள் அவர்களுக்கு கிடைத்து விட்டால் நாம் தொலைந்தோம்.
ஆயுத சாலையை ஒரு பெரும் கூட்டம் வேகமாக ஓடி நெருங்கிய அதே கணத்தில்
வெடி குண்டு வெடித்து பெரும் நாசத்தை ஏற்படுத்தியது.
பூம்! பூம்
உமிஙே சமர்ப்பிக்கும் அறிக்கை - ஆயுத சாலை குண்டு வெடித்து நாசமாகிப் போனது. ஆனாலும் தீ கட்டுக்குள் இருக்கிறது!
முட்டாளே.. கார்வினும், மாடஸ்டியும் சுதந்திரமாக திரிகையில் எதுவுமே கட்டுக்குள் இருக்க முடியாது.
கட்டோ... பொறு - ஒருவேளை தந்திரமாக நம்மை ஏமாற்றி விட்டு மின் நிலையத்திற்கு செல்லாமல் லிப்ட்டை நோக்கி ஓடுவார்களோ!



பினிக்ஸ் வளாகத்தை விட்டு வெளியேற இருக்கும் ஒரே ஒரு வழியான லிப்ட்டின் அடிவாரத்தில் -
இங்கிருக்க வேண்டிய காவலாளிகள் எங்கே தொலைந்தார்கள்.
அவர்கள் மீது ஏன் இவ்வளவு அக்கறை?
இங்கிருக்கும் காவலாளிகளிடம் மட்டுமே துப்பாக்கிகள் உண்டு.. அவர்களும் நம்மை எதிர்பார்த்து மின் நிலையத்திற்கு ஓடிப் போயிருக்க வேண்டும்.
ஹூம்...
தொலைகிறது..! சரி.. லிப்ட்டை கீழே வரவழையுங்கள் வில்லி
அந்த துப்பாக்கி களையும் முடக்கிப் போட நினைத்தேன்.
என்ன.. ஏதாவது கோளாறா?
நகர மாட்டேன் என்கிறது! லிப்ட்டுக்குரிய மின் இணைப்பையும் துண்டித்து விட்டார்களோ?
லிப்ட் இயங்க மறுத்தது.
கஸூமி படையோடு வந்து சேரும் போது மேலே காத்திருப்பதற்கு பதில் இங்கேயே காத்திருக்க வேண்டியதுதான்.. ஆனால் -
இங்கே பாதுகாப்பு போதாது!
இரு.. ஏதாவது செய்ய முடியுமா... பார்ப்போம்.


லிப்ட்டின் கீழே அடித்தளத்தில் மணல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.
எச்சரிக்கையாக எழுந்த தோட்டா முழக்கம் வாள் வீரர்களை மிரண்டோட வைத்தது.
டுமீல்! டுமீல்!
ஓரிரு துப்பாக்கிகளை கைவசம் வைத்திருக் கிறார்கள் போலும்!
தெரியும்.
அடுத்து.. தற்கொலை படை ஒன்றை அந்த இரட்டைகள் அங்கே அனுப்பி வைக்கக் கூடும்..
நாம் நெருக்கடி நிலைமைக்கு ஆளாகி விடுவோம்.
அதுதான் தற்கொலை என்று சொல்லி விட்டீர்களே - மரணத்தை நாம் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைப்போம்.
கடல் மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும் இராணுவம் அங்கே வந்து சேர்ந்தது.


கர்னல்! மாடஸ்டி வர்ணித்து எழுதியிருந்த லிப்ட் பிளாட்பாரம் இதோ அடையாளம் தெரியாதவாறு மூடி மறைக்கப்பட்டு இருக்கிறது.
கடல் வழி வந்த படையோடு கஸூமியும் இருந்தார்.
நமக்காக திறந்தே இருக்கும் என்றல்லவா எழுதி இருந்தாள்.
இதில் துளையிடுமாறு எஞ்சினீயர்களுக்கு உத்தரவு கொடு -சீக்கிரம்!
புகை எழுப்பிய டிராலி ஒன்றினை பின் தொடர்ந்து பினிக்ஸ் வீரர்கள் முன்னேறி நெருங்கினர்.
ஈர வைக்கோலை எரித்து புகை மூட்டி நம்மை மூச்சுத் திணறடிக்க திட்டமிடு கிறார்கள்.
கை வெடி குண்டை வீசி வராந்தாவை வெறிச்சோடச் செய்யுங்கள்.. நான் போய் தீயை அணைக்கிறேன்.. கூடுதல் நேரம் தாக்குப்பிடிக்க இது உதவும்!
திடீரென்று இடி விழுந்தது போன்ற ஒலி மேலே கேட்டது.
கடவுளே.. இது -
இராணுவம்! மேலே துளை போட்டு விட்டார்கள் வில்லி!
இராணும், பினிக்ஸ் வளாகத்தினுள் புகுந்தது.
இந்த வழியாக போங்கள் - நல்ல வேட்டை காத்திருக்கிறது!
மாடஸ்டி!



பத்திரமாக இருக்கிறாயா?
ம்ம்.. பினிக்ஸின் கதை முடிந்து விட்ட மாதிரிதான்... அரை டஜன் துப்பாக்கிகளே அவர்கள் வசம் இருக்கின்றன. அழிப்பது வெகு சுலபம்.
வாருங்கள்.. நாம் போய் போர் - தளபதிகளைக் கைது செய்வோம்!
யெஸ்!
அம்மூவரும் கண்ட்ரோல் அறையை சென்றடைந்தனர்.
ஹே.. என்ன இது வேஷம்?
பண்டை கால ஸாமுராய் வீரர்களின் போர்க் கவசம்!
எங்களை வென்று விட்டீர்கள். சுத்த வீரர்களுக்குரிய கௌரவத்தோடு மரணத்தை தழுவத் தயாராகி விட்டோம்!
எங்களை கொல்ல உரிமை இருக்கிறது உங்களுக்கு!
யாரையும் கொன்று எங்கள் கைகளை கறைப்படுத்திக் கொள்ளத் தயாரில்லை நாங்கள்!
நம்முடைய நியாயம் அவர்களுக்கு புரியவில்லை!
அப்படியானால் மாற்று வழியை நாம் கடைப்பிடிப் போம்!


ஏக காலத்தில் கத்தியை வீச வேண்டும் சகோதரா!
தெரியும் எனக்கு
பளபளக்கும் வாள்கள் காற்றை கிழித்துக் கொண்டு அரை வட்டமாக சுழன்றன.
கடவுளே..!
ஆஆஆஆ...!
அங்கே கிடக்கிறார்கள்.. தலை வேறு உடல் வேறாக!
டமாகோ டோக்கியாவில் பத்திரமாக இருக்கிறாள் வில்லி - உன்னை எதிர்பார்த்து காத்துக் கொண்டு!
என் அன்பை அவளிடம் தெரிவியுங்கள் - கஸுமி! நாங்கள் ஊர் திரும்ப உத்தேசத்திருக்கிறோம்!
ஒன்றை கவனித்தீர்களா வில்லி.. இந்த விவகாரத்தில் எத்தனையோ நெருக்கடிகளை நாம் எதிர் கொண்டு சமாளித்திருக் கிறோம். இருந்தும் ஒரு கீறல் கூட விழவில்லை நமக்கு - அதிர்ஷ்டக் காற்று நம் பக்கம் வீசுகிறது போலும்.
அல்லது.. தொழிலில் மேலும் ஒருபடி நாம் தேறிவிட்டோம் என்றும் வைத்துக் கொள்ளலாம் இல்லையா?

முற்றும்


லயன் காமிக்ஸ்
லயன் தீபாவளி மலர்!
இருளின் மைந்தர்கள்!
சூப்பர் கௌ-பாய் டெக்ஸ் வில்லரின் முழு நீள அதிரடி சாகஸம்!
விலை ரூ. 12/-